தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 24 | பிப்ரவரி 2024 | கனி 3



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

**MONTHLY**
**THE WORD OF CHRIST**


1

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 50
தலைப்பு : பூலோகத்தார் – People of the earth
வேத வாசிப்பு : 1நாளாகமம் 16:30

1. தாவீது நான் பூலோகத்தார் - 1இரா.2:2
2. பூலோகத்தை நீதியோடும் - சங்.98:9
3. நீ கட்டுகிறது, கட்டவிழ்ப்பது - மத்.16:19


மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

G-Pay & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

Contact Us: 6379350509

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: All Days of the Week

*Every Sunday,Thursday &*
*Saturday 6.00 P.M on Heaven TV*
*Every Monday, Tuesday &*
*Wednesday 6.00 P.M on Joy TV*

YouTube : the word of christ







**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 பிப்ரவரி -2024 கனி - 3


ஆசிரியருரை

## கிருபையில் பலப்படு
## Be Strong In the Grace



**கி**ருபை என்றால் இரக்கம். நம்முடைய பிதாவாகிய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் கிருபையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்த கிருபை நமக்கும் அவசியமாயிருக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு" என்று எழுதுகிறார் (2தீமோ.2;1). இயேசுகிறிஸ்துவின் கிருபை அளவற்றது. இந்த கிருபையில் பலப்படும்படியாக புத்திசொல்லுகிறார். "இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை" (2தீமோ.2:9). கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுத்த பவுல் சுவிசேஷத்தினிமித்தமாக துன்பத்தை அநுபவித்ததாக சொல்லுகிறார். சுவிசேஷத்தினிமித்தமாக பவுல் பல பாடுகளை சந்திக்கநேர்ந்தது, அதைப்போல பேதுரு மற்றும் அப்போஸ்தலர்களும் மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்று சுவிசேஷத்திற்காக தங்களை அர்ப்பணித் திருந்தார்கள். அந்நாட்களில் ஆலோசனை சங்கத்தாரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டார்கள். பிரதான ஆசாரியர்கள் நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளை யிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டு மென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான்.

அதன்பின்பு ஆலோசனை சங்கத்தார்கள்; "அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப்.5:40-42). இயேசுகிறிஸ்துவிலுள்ள கிருபையில் பலப்படும்படியாக கிருபையுள்ள வசனத்திற்கு

தங்களை ஒப்புக்கொடுத்து அந்நாட்களில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பலபாடுகளை அநுபவித்தார்கள். இன்றைக்கு ஒரு சிலபாடுகள் வந்தவுடன் ஆண்டவர் என்னை கைவிட்டார் என்று சொல்லி மறுதலித்துப்போகிற ஒரு கூட்டம் இருக்கிறது. அப்போஸ்தலர்களை வரவழைத்து அடித்தார்கள் என்று வாசிக்கிறோம். அந்த அடி யாருக்காக அநுபவித்தார்கள் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினிமித்தமும் சுவிசேஷத்தை அறிவித்ததினிமித்தமும் அநுபவித்தார்கள். ஆனாலும் அவர்கள் வெட்கப்படவில்லை. அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதை சந்தோஷமாக எண்ணினார்கள். இவ்விதமாக ஆண்டவர் நிமித்தமாக பாடுகள் வந்தவுடன் அதை வருத்தமாக நினைக்கிறீர்களா? அல்லது அதை சந்தோஷமாக நினைக்கிறீர்களா? இயேசுவானவர் சொல்லும்போது; "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என்றார் (லூக்.6:36). பிதாவானவர் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். அவர் ஒருவருக்கும் தூரமானவரல்ல. எல்லோரையும் நேசிக்கிறார். அவரைப்போல ஆண்டவர் தம்மை நிந்தித்தவர்களுக்காகவும், தம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணினார். தம்மிடம் வந்த ஒருவரையும் அவர் புறம்பே தள்ளாமல் அவர்களுக்கு நன்மைசெய்தார். தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கிப்பதில் அவர் எப்பொழுதும் தொய்வில்லாமல் அவர்களுக்கு அவருடைய வார்த்தைகளை பிரசங்கித்துக்கொண்டுவந்தார். அவரை சில கிராமங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் மற்ற கிராமங்களுக்கு தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கித்துக்கொண்டு வந்தார் எனக் காண்கிறோம். நாமும் அவருடைய வார்த்தைகளை சொல்லுவதிலும் கேட்பதிலும் பெலப்படுவோம். கிருபையுள்ள வசனங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

அவருடைய கிருபையில் பலப்பட நாம் சகிக்க கற்றுக்கொள்ளவேண்டும். சகிப்புத்தன்மை என்பது நமக்குள் உருவாகவேண்டிய ஒன்று. பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது; "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்" என்கிறார் (2தீமோ.2:10). அழுகிப்போன உடல்நிலையோடு ஒருவன் மருத்துவரை அணுகும்போது அந்த மருத்துவர் சகிப்புத்தன்மையோடு அவனுக்கு சிகிச்சை அளிக்கவேண்டும். அவருக்கு சகிப்புத்தன்மை இல்லையென்றால் அவர் அவனுக்கு சிகிச்சை அளிக்க முடியாது. பவுல் மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக சகலத்தையும் சகிக்கிறேன் என்கிறார். நாமும்கூட இவ்விதமான சகிப்புத்தன்னை உடையவர்களாக மாறவேண்டும். இயேசுவை நோக்கிப்பாருங்கள்: "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே

நினைத்துக்கொள்ளுங்கள்" (எபி.12:2,3). ஒவ்வொருவரும் சகிக்க கற்றுக்கொள்ள ஆண்டவர் இயேசுவை நோக்கிப்பார்க்கவேண்டும். அவர் சிலுவையில் எவ்வளவாய் பாடுபட்டு சகித்தார். தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் சிலாக்கியத்தை எண்ணிப்பார்க்கும்போது இந்த பாடுகள் பெரியவைகள் அல்ல. அதைப்போல நமக்கு வைக்கப்பட்டிருக்கிற பரலோகபாக்கியத்தை நாம் நினைக்கும்போது இவ்வுலகபாடுகள் எம்மாத்திரம்.

அப்போஸ்தலனாகிய பவுல்; "பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" என்கிறார் (2கொரி.11:27). ஆதி முதலாக எந்த ஒரு தீர்க்கதரிசியும், எந்த ஒரு தேவனுடைய ஊழியனும் சுகபோகமாக வாழ்ந்ததாக நாம் வேதத்தில் எங்கும் வாசிக்கமுடியாது. அநேக பாடுகளிலும் உபத்திரவங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள். பவுல் ஆசிய முழுமைக்கும் சுவிசேஷத்தை அறிவித்து பலபாடுகளை சந்தித்திருக்கிறார். வருத்தம் அவருடைய வாழ்க்கையின் உணவாக இருந்திருக்கிறது. இன்று நான் கர்த்தருக்குள்ளாக ஒரு குறையுமின்றி வாழ்கிறேன் என்று சொல்லுகிறார்கள் அதிகம். ஆனால் பவுல் பசியிலும், தாகத்திலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்ததாக சொல்லுகிறார். இவ்வளவு வல்லமையான ஊழியத்தைச் செய்துகொண்டு வந்த அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தினிமித்தம் துன்பத்தை அநுபவித்தார். கர்த்தருடைய ஊழியத்தை அவருடைய சிந்தையோடு செய்கிற ஒவ்வொருவருக்கும் பாடுகள் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். அந்த பாடுகளோடு செய்யும் ஊழியமே கர்த்தருடைய ஊழியமாக இருக்கிறது. பாடுகள் இல்லையென்றால் அது கர்த்தருடைய ஊழியம் ஆகாது. ஏனெனில் அவர் பிறப்புமுதல் மரணம் வரை பாடுபட்டார் என நாம் நான்கு சுவிசேஷபுத்தகங்களிலும் படிக்கிறேம். இயேசுவானவர் பிதாவினாலே தேற்றப்பட்டார். அதைப்போல நாமும் அவருடைய கிருபையினால் தேற்றப்படுவோம்.

நாம் "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்" (2தீமோ.2;12). நாம் இயேசுகிறிஸ்துவோடு நித்தியத்தில் பிரவேசிக்கப்போகிறோம், இந்த ஆசீர்வாதத்தை நாம் பெறுகிறவர்களாயிருப்போமானால் அவரோடு சேர்ந்து இங்கே பாடுகளையும், அவர் நாமத்தினிமித்தமாக அநுபவிக்கவேண்டும். எனக்கு பாடுகள் வேண்டாம் பரலோகம் மட்டும் வேண்டும் என்று சொல்லுவோமானால், ஆண்டவருடைய கஷ்டத்தில் பங்குகொள்ளாதவர்களாக இருப்போம். பரலோகத்தில் ஒரு சத்தம் உண்டானதாக வெளிப்படுத்தலில் படிக்கிறோம். யார் இவர்கள், எங்கிருந்து வந்தவர்கள் என்ற கேள்வி எழும்பும்போது; "அதற்கு நான்; ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன், அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல்

வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை" என்று படிக்கிறோம் (வெளி.7:14-16). இந்த பூமியில் இயேசுவின் நாமத்திற்காக கஷ்டப்படுகிறவர்களுக்கு பரலோகத்தில் இளைப்பாறுதல் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய துன்பத்தையும் வேதனைகளையும் விட்டு நீங்குவார்கள். அவர்களுக்கு இனி ஒருபோதும் துன்பம் இருக்காது அவர்கள் பசியடைவதுமில்லை இனி தாகமடைவதுமில்லை, ஏனெனில்; அவர்கள் நித்தியமானவரோடு நித்திய நித்தியமாக வாழ்வார்கள். இந்த நித்தியமான வாழ்க்கை வாழவேண்டுமானால், நீங்கள் அவருடைய கிருபையில் பலப்படவேண்டும். அப்போஸ்தலர்கள் அவருடைய கிருபையில் பலப்பட்டார்கள். தீமோத்தேயுவைப்போன்ற உண்மையுள்ள ஊழியர்களையும் அவருடைய கிருபையில் பலப்படும்படியாக ஆலோசனை கொடுத்தார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்களும் அவருடைய கிருபையில் பலப்படவேண்டும். அவரைப்போல இரக்கசிந்தை உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய கிருபையில் பலப்பட்டு சாட்சியுள்ளவர்களாக வாழும்போது; நித்தியமான வாழ்வை பெற்றுக்கொள்ளுவோம். அப்படிப்பட்டவர்களை "சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார்" என வெளி.7:17-ல் படிக்கிறோம். பூமியில் கண்ணீரோடு வாழ்கிறவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார். அங்கே துன்மார்க்கன் இருப்பதில்லை, களவு செய்கிற கூட்டம் இருப்பதில்லை. அங்கே இயேசுவின் இரத்தத்தினால் கழுப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், தேவனுடைய நாமத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவர்கள். சிங்காசனத்தின் மத்தியில் காணப்படுவார்கள். ஆட்டுக்குட்டியானவரோடு நித்திய நித்தியமாக அவரோடு வாழுவார்கள். இந்த பரலோகபாக்கியத்தை பெற்றுக்கொள்ள இயேசுகிறிஸ்துவின் கிருபையில் பலப்படுங்கள்.

**பவுலுடைய வேண்டுதலுக்கு கர்த்தர் கொடுத்த பதில் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல், தன்னுடைய வாழ்க்கையில் ஒரு முள் கொடுக்கப்பட்டதாக சொல்லுகிறார். அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது என்கிறார். அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டினேன் அதற்கு அவர்: "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நாம் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" என்கிறார் (2கொரி.12;8,9). இரக்கம் பாராட்டுகிறவர்களுக்கு இரக்கம் கிடைக்கும்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கர்த்தருடைய கண்களில் இரக்கம் கிடைத்தது. என் கிருபை உனக்குப்போதும் என்றார். தேவனுடைய சமுகத்தில் கிருபை அதாவது இரக்கம் கிடைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இரக்கமில்லாதவர்களுக்கு இரக்கமில்லாத தீர்ப்பு கிடைக்கும். பவுல் கிருபையில் பலப்பப்பட்ட ஒருவர் ஆகையால் அவருக்கு கிருபை கிடைத்தது. நீங்களும் இரக்க சிந்தையுள்ளவர்களாயிருங்கள். உங்களுக்கும் இரக்கம் கிடைக்கும்.



# இன்று ஏன் ஒரே ஞானஸ்நானம் உண்டு?

## WHY THERE IS BUT ONE BAPTISM TODAY?

*-J.C.Choate*

இதைக்குறித்து நீங்கள் எச்சரிக்கையுடையவர்களாக இருக்கிறீர்களோ அல்லது இல்லையோ நான் அறியேன், ஆனால் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருக்கிறவர்கள் மத்தியில் அநேக ஞானஸ்நானங்கள் உண்டென போதிக்கிறவர்கள் இருக்கின்றனர். அவைகளில் தண்ணீரில் மூழ்குவதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை தெளிப்பதால் ஞானஸ்நானம், ஒருவனுடைய தலையில் தண்ணீரை ஊற்றி ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் இன்னும் இதுபோன்ற பல முறைகளில் ஞானஸ்நானம் உண்டெனக் கூறப்படுகிறது, இந்தக் காரியத்தைக் குறித்து போதிக்கிறவர்களுடைய கருத்துப்படி ஞானஸ்நானத்திற்கு பல வேறுபட்ட நோக்கங்கள் உள்ளன. பலர், ஞானஸ்நானமானது ஒருவனுடைய இரட்சிப்பிற்கான அடையாளமென கூறுகின்றனர் மற்றவர்கள் ஞானஸ்நானமானது பாவங்களின் மன்னிப்புக்கென்றும், ஒருவனை கிறிஸ்துவுக்குட் படுத்துவதற்கென்றும், அவருடைய சபைக்குள் சேர்ப்பதற்கென்றும் என போதிக்கின்றனர்.

வேதாகமம், ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உண்டென்று போதிக்கிறது, பவுல் "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே. 4:4-6) என்கிறார். ஒரே தேவனும், ஒரே கர்த்தரும் அல்லது கிறிஸ்துவும், ஒரே ஆவியும் அல்லது பரிசுத்த ஆவியும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே சரீரமும், ஒரே நம்பிக்கையும் உண்டென தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவமனிதன் சொன்னதை தயவு செய்து கவனியுங்கள் இவையெல்லாவற்றிற்கும் மேலாக, அவன் ஒரே ஞானஸ்நானம் உண்டென வலியுறுத்திக் கூறுகிறான். ஒரே தேவனும், ஒரே கிறிஸ்துவும், இன்னும் இதுபோல் மற்றவைகளும் ஒரே காரியமாக இருக்கிறதாக பொருள்படுமானால் பிறகு ஒரே ஞானஸ்நானம் என்பதும் ஒரே ஞானஸ்நானம் தானே.

ஆனால் இது எந்த ஞானஸ்நானமாக இருக்கும்? இன்று மனுஷர் பேசுகின்ற ஞானஸ்நானத்தைத் தவிர, வேதவாக்கியங்களிலும் கூட பல்வேறு ஞானஸ்நானங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம், உதாரணமாக, லூக்கா 7:29-ல் ஜனங்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டதாக வாசிக்கிறோம், கிறிஸ்து தம்மை சோதிக்கும்படி வந்த ஒரு பிரிவினரை நோக்கி "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்" (மாற்கு 11:30). கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் (மத், 3:13-17), கிறிஸ்து எல்லா நீதியையும் நிறைவேற்றும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோதிலும், பொதுவாக ஜனங்கள் சபையாகிய கர்த்தருடைய

ராஜ்யத்தின் வருகைக்கு ஆயத்தப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றார்கள், ஆனபடியினால் இது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (மத்.3:2). பவுல் எபேசுவில் யோவானுடைய ஞானஸ்நானத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருந்த சில மனுஷரை எபேசுவில் கண்டான், ஆனால் அவர்கள் ஆவி அல்லது பரிசுத்த ஆவியைப்பற்றி கேள்விப்படாதவர்களாயிருந்தனர், ஆனபடியினால் அவன் அதன்பிறகு யோவானுடைய ஞானஸ்நானத்தின் நோக்கத்தைக் குறித்த காரியங்களை அவர்களுக்குப் போதித்தான். "யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான், அதைக்கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.19;1-5). யோவானுடைய ஞானஸ்நானமானது சந்தேகத்திற்கு இடமளிக்கவில்லை. இது ஒரு நோக்கத்தை நடப்பித்தது அதன்பின் அது இல்லாமல் முடிவடைந்தது.

மத்தேயு 3;11, 12-ல் யோவான் ஸ்நானகன், அல்லது ஞானஸ்நானங்கொடுத்த யோவான் அல்லது தண்ணீரில் மூழ்கச்செய்தவன் கிறிஸ்து கொடுப்பாரென இரு வகையான ஞானஸ்நானங்களைப் பற்றி பேசினான், நாம் வாசிக்கிறோம், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார், தூற்றுக்கூடை அவர்கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்." இங்கே யோவான் கிறிஸ்து எவ்வாறு ஜனங்களை நடத்துவார் என்பதை அறுவடை செய்கிற ஒருவராக படம்பிடித்து சுட்டிக்காட்டி விளக்குகிறான், அந்நாட்களின் ஜனங்கள் கோதுமை அறுவடையைக் குறித்து நன்கு அறிந்தவர்களாயிருந்தனர். அந்த கோதுமை கதிரடிக்கப்படும், பின்பு காற்றின் உதவியினாலோ அல்லது தூற்றுக்கூடை யினாலோ பதரெல்லாம் தூற்றப்பட்டு கோதுமை மணிகள் பிரித்தெடுக்கப்படும், அந்த கோதுமை சேகரிக்கப்பட்டு உணவுக்காக பத்திரப்படுத்தப்படும் ஆனால் பதர் அல்லது உபயோகமற்ற பொருள் சுட்டெரிக்கப்படும். இந்த முறையிலே கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென யோவான் கூறினான்,

அதன்பிறகு, இயேசு தேற்றரவாளர் அல்லது பரிசுத்த ஆவியை அப்போஸ்தருக்கு அனுப்புவேன் என்பதாக அவர்களுக்கு வாக்குப்பண்ணினார் (யோவா 15:26; யோவா. 16:7, 13) அப்போஸ்தலர் 1:8ல் மீண்டும் அவர் அவர்கள் மேல் பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்பதாக வாக்குப்பண்ணினார். லூக்.24:49யும் வாசியுங்கள். அப்போஸ்தலர் 2ல் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள்மேல் ஊற்றப்படுகிறதையும், கிறிஸ்து அவர்களுக்குப் போதித்திருந்த சகலத்தையும் நினைப்பூட்டும் படிக்கும் அந்நிய பாஷைகளில் பேசும்படிக்கும் அற்புதங்களை நடப்பிக்கும்படிக்கும் அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்படுகிறதையும் வாசிக்கிறோம். இவர்கள் மூலம் சகலமும்

ஆசீர்வதிக்கப்படும். ஆனால் கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பாரென்றும் யோவான் சொன்னான். இது எதற்கு ஒப்பிடப்படுகிறது? எது இரட்சிக்கப்படும், கோதுமையானது நீதியைக் குறிக்கிறது பின்பு எது சுட்டெரிக்கப்படும், பதர், துன்மார்க்கத்தைக் குறிக்கிறது, கிறிஸ்து அப்போஸ்தலரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்துவார், ஆனால் அவர் துன்மார்க்கரையோ அக்கினியினால் ஞானஸ்நானப்படுத்துவார். ஞானஸ்நானமானது தண்ணீரில் மூழ்கடிக்கப்படுதல் என்றும் ஆனபடியினால் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் மூழ்கடிக்கப்பட்டார்கள் அல்லது நிரப்பப்பட்டார்கள், கிறிஸ்து அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுப்பாரென இவ்வார்த்தை சொல்லுகிறபோது துன்மார்க்கர் அக்கினியினால் அமிழ்த்தப்படுவார்களென இது அர்த்தமாகிறதென்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறாக துன்மார்க்கர் தீர்க்கப்படுவார்களென தேவவாக்கியங்களில் நாம் எங்கே வாசிக்கிறோம்? முதல் இடத்தில் ஒருநாள் கிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்ப்பாரெனவும் துன்மார்க்கர் நரகத்திலே தள்ளப்படுவார்களெனவும் (2பேது 2:4) அல்லது அவர்கள் நித்திய ஆக்கினைஅடையப் போவார்களெனவும் (மத்.25:46) நாம் அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் நரகம் ஒரு அக்கினிகடல் என விவரிக்கப்பட்டுள்ளது ( 2பேது 3:7, யூதா 7, வெளி.2:10,14; 21:8) துன்மார்க்கர் தேவனை அறியாதவர்கள் இழந்து போனவர்கள் நித்திய அழிவாகிய அக்கினி கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள், அல்லது அமிழ்த்தப்படுவார்களென அர்த்தமாகிறது. நிச்சயமாக இருதயத்தில் செம்மையான ஒருவனும் அக்கினியால் ஞானஸ்நானம் பெற விரும்பமாட்டான்.

பவுல் 1கொரி.10:1-4ல் இவ்வாறு எழுதினான் “ இப்படியிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாம் மேகத்துக்கு கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்த கன்மலை கிறிஸ்துவே.” அந்நாட்களில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது தேவையானதாகக் கருதபடாமலிருந்த போதிலும்கூட சமுத்திரத்தின் வழியே நடந்துவந்த இஸ்ரவேல் ஜனங்களைத் திரும்பிப்பார்த்து, அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்களென விவரித்தான், வேறுவிதமாக கூறுவோமானால், அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் அடக்கம் பண்ணப்பட்டார்கள் அல்லது மூழ்கடிக்கப்பட்டார்கள்.

செபெதேயுவின் குமாரருடைய தாய் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தில் தம்முடைய குமாரராகிய இரண்டு பேரில் ஒருவன் அவருடைய வலது பாரிசத்தில், ஒருவன் இடது பாரிசத்தில் உட்கார கிறிஸ்து அனுமதிக்க வேண்டுமென விண்ணப்பித்த போது, “இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை, நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என்

பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என்காரியமல்ல என்றார்" என நாம் வாசிக்கிறோம் (மத். 20:22,23). மீண்டும் கிறிஸ்து ஆகிலும் நான் மூழ்கவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு,....(லூக் 12:50) என்றார். ஞானஸ்நானமானது பாடுகளினால் அவர் நெருக்கப்படுகிறேன் என சிலுவையின் மேல் தம்முடைய பாடுகளைக் குறித்து இங்கே கிறிஸ்து பேசுகிறார். உண்மையாகவே அவர் ஒரே ஒருமுறை இந்தப்பாடுகளின் வழியே சென்றார்.

கடைசியாக, வேதவாக்கியங்கள் விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகிறது. இந்த ஞானஸ்நானமானது தண்ணீரில் பெறுவதாகும் (அப்.8:26-39) ஒரு அடக்கம் (கொலோ.2:12; ரோமர் 6:3,4), பாவமன்னிப்புக்கென்று பெறுவதாகும் (அப்.22:16), இரட்சிக்கப்படும்படி பெறுவதாகும் (1 பேது 3:21), மேலும் ஒருவன் சபைக்குள் சேர்க்கப்பட பெறுவதாகும் (1 கொரி. 12:13). இது கிறிஸ்துவின் நாமத்தில் (அப்.2:38) அதாவது பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் (மத்.28:19,20) நடைபெற வேண்டியதாயிருந்தது. கிறிஸ்து நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15, 16) என்றார்.

எபேசியர் 4:4-6க்குத் திரும்புகையில் பவுல் ஒரே ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது என குறிப்பிட்டதை நினைவுகூருங்கள். இந்தக் கூற்றை அவன் கூறின அந்த சமயம் கிட்டத்தட்ட 64AD யாக இருந்தது. ஆனால் வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற எல்லா ஞானஸ்நானத்திலும் எது ஒரே ஞானஸ்நானமாயிருக்கும்? எந்த சமயத்திலும் ஒரே ஞானஸ்நானமானது தண்ணீரில்லாத ஞானஸ்நானம் அல்லது விசுவாசிகளின் ஞானஸ்நானம், இது எப்போதும் குறிப்பிடப்பட்டுள்ளது என உற்று கவனிப்பதற்கு என்று ஒரு சிறந்த விதியாயிருக்கும். வேறு வகையில், வேதவாக்கியங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மற்றும் அக்கினி ஞானஸ்நானம் யோவானுடைய ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ்நானம் மேலும் மேகங்களில் மற்றும் சமுத்திரத்தில் ஞானஸ்நானம் போன்றவற்றைப் பற்றி பேசுகின்றன. ஆனபடியினால் நாம் எபேசி. 4:4-6ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே ஞானஸ்நானத்தைப்பற்றி வாசிக்கையில் நாம் இது விசுவாசிகளின் ஞானஸ்நானத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது என முடிவுக்குவர வேண்டும்.

நிச்சயமாகவே இன்று பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நம்முடைய நாட்களிலுள்ள ஜனங்களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ளதென ஜனங்கள் பேசுகின்றதை நாம் கேள்விப்படுகிறோம், ஆனால் அந்த ஞானஸ்நானமானது கிறிஸ்துவினால் அப்போஸ்தலருக்கென்று வாக்குப்பண்ணப்பட்டிருந்தது, மேலும் அவர் ஒருவரே அதைக் கொடுக்கிறவராயிருந்தார். அந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டபடியினால், இன்று ஒருவரும் அந்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க முடியாது, தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி

போதிக்கிற மற்றவர்கள், இரட்சிக்கப்பட்ட விசுவாசி, தான் இரட்சிக்கப்பட்டவராயிருக்கிறாரென காண்பிக்கும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம் என உரிமைபாராட்டுகிறவர்கள் உண்டு, அவர்கள் சரியாக இருந்தால் கிறிஸ்துவுக்கு வெளியேயும் அவரது சபைக்கு வெளியேயும் இரட்சிக்கப்பட்டவராயிருக்கிற ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் பிரவேசிப்பதற்கு கண்டிப்பாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என அர்த்தமாகிறது (கலா. 3:26,27; 1கொரி.12:13).

இவ்விஷயத்தில் இப்பேர்பட்ட ஜனங்கள் தவறுகின்றனர் என்பதை நாம் அறிவோம். ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து தண்ணீரில் அடக்கம் என்ற அந்த பகுதியில் இணையாத வரை அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க முடியாது.

ஞானஸ்நானப்படுத்துவதற்காக தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது தேவனுடைய வார்த்தையின் போதனைக்குத் தூரமானது. ஞானஸ்நானம் பெறும்படிக்கு தலையில் தண்ணீரை தெளிப்பது மற்றும் ஊற்றுதல் பற்றிய எந்த வழியும் சொல்லப்படவில்லை. ஞானஸ்நானமானது ஒரு அடக்கமாகும், ஒரு முழுகுதல் ஆகும். தெளித்தல் என்பது தெளித்தலே, ஊற்றுதல் என்பது ஊற்றுதலே, ஆனால் ஞானஸ்நானமாகாது. இந்தவிதமான பழக்கங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவை.

இப்போது இதுவே கேள்வி: நீங்கள் வேதாகமத்தினுடைய ஒரே ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அப்படியில்லையென்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் வாசிப்பீர்களென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த அனைவரும் சுவிசேஷத்தை அல்லது கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேள்விப்பட்டு தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டு தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் பொருட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் அல்லது தண்ணீரில் மூழ்கினார்கள் என நீங்கள் கண்டுகொள்ளலாம். அதன்பின் கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் அவர்களை சேர்த்துக்கொண்டார் (அப். 2:38, 41, 47). அவர்கள் செய்தபடி நீங்கள் செய்வீர்களென்றால் கர்த்தர் உங்களையும் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருப்பீர்களானால் அல்லது நீங்கள் பெற்றிருப்பதாக நினைப்பீர்களானால் அது தெளிப்பாக அல்லது ஊற்றுதலாக அல்லது அது சரியான நோக்கத்திற்காக இல்லாமலிருக்குமானால் நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை, நீங்கள் ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டுள்ளபடி ஞானஸ்நானம் பெற வேண்டும். இல்லை, ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது, மேலும் நீங்கள் கர்த்தருடைய உபதேசத்தின்படி இல்லாவிட்டால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருக்கமாட்டீர்கள். வேதவாக்கியங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெறும்போது மட்டுமே நீங்கள் வேதாகமத்தின் ஒரே ஒரு ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறீர்களென உங்களால் கூறமுடியும்.

ப.ஏ

# வேதாகம கதாபாத்திரங்கள்
# Bible Characters

35



## பரிசுத்த வேதாகமத்தில் சாலொமோன்
## Solomon In The Holy Bible

1. தாவீதின் கடைசி மகன் என்று சொல்லப்படுகிறது - 1நாளா.3:5
2. தாவீது சாலொமோனை ராஜாவாக்க கட்டளை - 1இரா.1:33
3. சாலொமோனின் விண்ணப்பம் - 1இரா.3:7
4. சாலொமோன் கேளாத ஐசுவரியத்தை பெற்றான் - 1இரா.3:13
5. சாலொமோனின் சிறப்பான தீர்ப்பு - 1இரா.3:16
6. சாலொமோன் கட்டிய ஆலயம் - 1இரா.6:38
7. சாலொமோனின் நீதிமொழிகள் 3000 - 1இரா.4:32
8. நாள் ஒன்றிற்குச் செல்லும் சாப்பாட்டு செலவு - 1இரா.4:22
9. சாலொமோனின் தவறு அந்நிய ஸ்திரீகள் உறவு - 1இரா.11:1
10. சாலொமோன் எருசலேமில் அடக்கம் - 2நா.9:30

### இந்தப் பாடத்திற்கான கேள்வி:

**தீர்க்கதரிசியாகிய நாத்தான் சாலொமோனுக்கு இட்ட பெயர் என்ன?**

**விடை:** யெதிதியா - "அவர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்ப, அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு யெதிதியா என்று பேரிட்டான்" (2சாமு.12:25)



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

36




### பரிசுத்த வேதாகமத்தில் ஸ்தேவான்
### Stephen In The Holy Bible

1. இவன் கிரேக்க பாஷை பேசிய யூத ஜாதியான்
2. அப்போஸ்தலர்கள் 12 பேரும் தங்கள் கைகளை 7பேர் மீது வைத்தார்கள் அவர்களில் ஒருவன் - அப்.6:5
3. ஸ்தேவான் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களைச் செய்தான் - அப்.6:8
4. ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி அவனோடு தர்க்கம்பண்ணினார்கள் - அப்.6:9
5. பொய்ச்சாட்சிகளை நிறுத்தினார்கள் - அப்.6:12
6. அவன் முகம் தேவதூதன் முகம்போலிருந்தது - அப்.6:15
7. அவனுடைய பிரசங்கம் ஆபிரகாம் துவங்கி இயேசு வரை பிரசங்கித்தான் - அப்.7:1
8. நகரத்துக்கு புறம்பே தள்ளி கல்லெறிந்தனர் - அப்.7:57
9. இயேசுவானவர் நிற்கிறதைக் கண்டான் - அப்.7:55
10. ஸ்தேவானுடைய மரணம் - அப்.7:60

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***தேவாலயத்தில் ஜெபிக்கும்போது ஸ்தேவானைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும் இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றவன் யார்?***

**விடை:** பவுல் - "உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்திப்படுகிறபோது நானும் அருகே நின்று, அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்ககளே என்றேன்" (அப்போஸ்தலர் 22:20)



பெண்கள் பகுதி

# நித்திய பலியான இயேசு கிறிஸ்து
## Jesus Christ, Eternal Sacrifice
### நம்முடைய மறுமொழி

-Betty



தேவவாக்கியங்களில் மிகச்சரியான முழுமையான வாசிப்பில் நாம் தொடர்ச்சியான ஆயத்தத்தையும், ஒன்றின்மேல் ஒன்றாக கட்டப்பட்டுள்ளதையும் இறுதியாக மனிதன் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கு திறந்த வழி கொடுக்கப்பட்டிருக்கிறதையும் காணலாம். பாவத்திற்கான சரீரப்பிரகாரமான தண்டனைக்குரியவை இயேசுவின் மரணத்தில் கிரயமாக்கப்பட்டது. மனிதவர்க்கத்தோடு அவர் கட்டப்பட்டு, தேவனுடைய புத்திர உறவினால் தேவனோடு நம்முடைய புத்திர உறவிற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டதின் மூலம் ஆவிக்குரிய ஒப்புக்கொடுத்தல் உருவாக்கப்பட்டது.

இவையெல்லாம் நமக்கு முன் திட்டமிடப்பட்டு, நம்முடைய ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்ய போதுமானதாயிருக்கிறது. ஆனால் மற்றபடி மன்னிப்பின் போர்வை ஒவ்வொரு மனிதனையும் மூடிக்கொள்கிறதில்லை. நாம் எவ்வாறு இதை நமக்கென்று சொந்தமாக்கிக் கொள்கிறோம்? **நாம் எவ்வாறு தனிப்பட்ட முறையில் தேவனுக்கு மறுமொழி கொடுக்கிறோம்?** (யோவா 6:45).

“பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்” என்கிறது. உலக ஜனத்தொகையின் மத்தியில் எல்லாரும் பிதாவின் செய்தியிலிருந்து உண்மையாக கற்றுக்கொள்கிறதில்லை. 2 தெசலோனிக்கேயர் 2:14. “எங்கள் சுவிசேஷத்தினாலே அவர் உங்களை அழைத்தார்” என போதிக்கிறது. எனவே பிதாவின் சுவிசேஷச் செய்தி நம்முடைய இருதயங்களுக்கு அழைப்புவிடுகிறது. சுவிசேஷம் என்றால் என்ன? இது கொரிந்தியர் 15:3,4ல் இவ்வாறாக விளக்கப்பட்டுள்ளது

“கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து”

### ஒப்புக்கொடுத்தல் - The Commitment

சில ஜனங்கள் செய்தியைக் கேட்டு அதை மறுதலிக்கின்றனர். மற்றவர்கள் கேட்டு இதன் அழைப்பு தங்களுடைய இருதயங்களை உடைக்கிறது என அவர்களுடைய மறுமொழி பிதாவினிடத்தில் ஒரு உணர்ச்சியுள்ள அன்பு மழையாக தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் விருப்பத்தில் உடன்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களில் ஒரு திருப்புமுனை வந்தடைந்தது என்பதை அறிந்து கொள்கின்றனர்.

பரிதாபப்படத்தக்க வகையில் பலர் தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் ஆவிக்கேற்றபடி பிறந்திருக்கிறார்கள் என்றும் தேவன் மேலுள்ள தங்களுடைய புதிய அன்பு சாட்சி பகருகிறபடியினால் அவர்களுடைய இருதயம் மாற்றப்பட்டு அவர்கள் சந்தோஷமும் அடைகின்றனர் என்று தவறாக நம்புகின்றனர்.

சந்தேகமே இல்லை, திருப்புமுனை, ஒப்புக்கொடுத்தலின் நொடிப்பொழுது போன்றவை இரட்சிப்பினுடைய ஒழுங்குமுறையின் ஒரு கடினமான பகுதியாயிருக்கிறது. நம்முடைய வேதவாக்கிய ஆராய்ச்சியில் எப்போது இதற்கு இணையான ஒரு சம்பவத்தை நாம் காண்கிறோம்? இயேசு மனிதனுக்காக முழுமையான ஒப்புக்கொடுத்தலின் விளிம்பை அடையும்போது கெத்சமனே தோட்டத்தில் இது காணப்படவில்லை அவர் தேவனுடைய

சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க போராடினபோதும் கூட செய்யப்பட்டுள்ள பாவத்திற்காக திகில் அடைந்ததாக பொருள்பட்டது.

உண்மையாக அவர் அந்த திட்டத்தினை சந்திக்க வேண்டியவராயிருந்தார் மேலும் நம்மைத் தெரிந்துகொண்டாலும் நிராகரித்தாலும் உண்மையாகவே அவர் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டியவராயிருந்தார் நாம் ஒவ்வொருவரும் அந்தத் திட்டத்தினை சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் கண்டிப்பாக தேவனை நம்முடைய பிதாவாக தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது அவரை புறக்கணிக்க வேண்டும். நாம் கண்டிப்பாக நம்முடைய மாம்ச சித்தங்களை அவருக்குக் கீழாகக் கொண்டு வரவேண்டும், கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து கொள்வதைத் தெரிந்துகொண்டது போல, நாம் அந்தப் பாவத்திற்கு இனி ஒருபோதும் ஊழியஞ்செய்யக்கூடாது என்ற விருப்பத்தோடு அவைகளை நம்மிடமிருந்து எடுத்துப்போடும்படி அவருக்கு அனுமதி அளிப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், கிறிஸ்து தோட்டத்தில் மனப்பூர்வமான ஒப்புக்கொடுத்தலோடு முடித்திருந்தார் என நினைக்கலாம். அந்த நேரத்திற்குத் திரும்புகையில்: அவருடைய போராட்டம் நிறைவடைந்தது; அவர் தமக்குள்ளாக சமாதானத்தோடிருந்தார். இன்று தேவனுடைய மன்னிக்கப்பட்ட குழந்தையாக இருக்கும் விருப்பத்தோடு, அன்பினால் அவைகள் அவரிடமாகத் திரும்பும்போது இது பல இருதயங்களை விவரிக்கின்றதில்லையா? அவர் அதை நிறுத்தியிருப்பாரானால், அங்கே **சிலுவை** இருந்திருக்காது, **இரத்தஞ்சிந்துதல்** இருந்திருக்காது, **பாவத்திற்கான கிரயம் செலுத்தப்பட்டிருக்காது, தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படிக்கு நமக்காக ஒரு வழி உருவாக்கப்பட்டிருக்காது.**

இதே முறையில், தங்களுடைய தனிப்பட்ட சுய ஒப்புக்கொடுத்தல் நிலையில் தடைசெய்கிறவர்கள் பாவத்திற்கு மரிக்கின்ற ஒழுங்கு முறையிலும் கிறிஸ்துவோடு மரிப்பதிலும் அவரோடுகூட உயிர்த்தெழுதலிலும் பங்கடையவே முடியாது.தேவனால் மன்னிக்கப்பட்ட ஒருவன் என்பதன் அர்த்தம் பாவிக்குள் மனம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவன் அதிகம் கிரியை செய்யவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறாரா?

## கிறிஸ்துவோடு மரித்தல் - Dying with Christ

நமக்காக மரித்த அவருடைய மரணத்தில் நாம் எவ்வாறு கிறிஸ்துவை மிக ஆர்வத்துடன் பின்பற்றுகிறோம்? ரோமர்6:17,18 இவ்வினாவிற்கு

“முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்” என்று நமக்குச் சொல்லுகிறது.

**இவ்வாறாக, மரணம், அடக்கம் மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகிய தேவனுடைய செய்தியை நாம் கேள்விப்படுகிறோம்.**

நாம் இதன் அர்த்தத்தைக் கற்று அறிந்திருக்கிற வண்ணமாக அவருடைய அன்பின் வல்லமையானது பாவத்தை விட்டு திரும்பும்படிக்கு நம்மை அழைத்துக் கொண்டு வருகிறதாகவும் அவருக்கு நம்முடைய ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்கும்படிக்கு நம்முடைய இருதயங்களை அழைக்கிறது. **பிறகு அந்த கோட்பாட்டின் அமைப்பிற்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிறோம்.** சுவிசேஷம் - மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் - என்பவை எந்த அமைப்பை நம்முடைய சொந்த வாழ்வில் ஏற்படுத்துகிறது? ரோமர்6:3-11.

“கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப்பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்” என்று விடையளிக்கிறது.

எனவே, கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் நம்முடைய தனிப்பட்ட சொந்த ஆத்துமாக்களுக்கு புத்திர உறவை ஏற்படுத்தி உரிமைபாராட்ட விரும்புவோமானால், நாம் கண்டிப்பாக அவருடைய மரணத்தின் மாதிரியின்படி பாவத்திற்குச் **செத்து,** ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு அதன்பின் **உயிர்த்தெழுந்து** அல்லது தேவனுடைய குடும்பத்தில் ஒரு புதிய மனுஷனாக ஒரு புதிய ஜீவியத்தை நடத்தும்படிக்கு ஞானஸ்நானத்திலிருந்து எழுப்பப்பட வேண்டும். **இந்த மரணம் மற்றும் புதிய பிறப்பு இல்லாமல் புதிய வாழ்வு இருக்க முடியாதென** நாம், தனிப்பட்டவிதத்தில் தேவனுக்கு முன்பாக அறிந்து கொள்வது இவற்றின் அதிமுக்கியமானதாகும்.

### “புதிய மனிதனின்” பிறப்பு - The Birth Of the “New Man”

இந்த ஒழுங்கு முறையில் என்ன நடைபெற்றுள்ளது? பழைய மனிதனின் மரணத்தில், ஒரு புதிய பிறப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. இயேசு போதித்தபடி “..... ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் (மறுபடியும்) பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்....” (யோவான்3:3-5).“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2கொரி.5:17).

- இதன் முழுப்பகுதியும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் கட்டளைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார். புருஷனுக்குக் கிறிஸ்து தலையாயிருக்கிறான். புருஷன் ஸ்திரீக்காக உண்டாக்கப்பட்டவனல்ல, புருஷனானவன் தேவசாயலும் மகிமையுமா யிருக்கிறான். ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷனிலிருந்து தோன்றினவளாயுமிருக்கிறாள்.

- இரண்டாவது முக்கியமான கருத்து என்னவென்றால் புருஷனுக்கும் ஸ்திரிக்குமிடையே தோற்றத்தில் வெளிப்படையான அடையாளமிருக்க வேண்டும். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீன மாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே போதிக்கிறது.

பெண்கள் பகுதி

# எல்லாம் புதிதாயின
# All things have become new

*-Glory Arjunan*



**அ**ன்பு சகோதரியே, எல்லாம் புதிதாயின! இவ்வசனத்தை அடிக்கடி வாசித்திருப்போம். சில வேளைகளில் பிரசங்கத்திலும் கேட்டிருப்போம். நாமும்கூட எல்லாம் புதிதாகவேண்டும், பழைய பாடுகள். பிரச்சனைகள், தோல்விகள், நோய்கள் எல்லாமே நம்மை விட்டு அகல வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த புதியவைகள் எவைகள் என நாம் அறிந்துகொள்வது இக்கடைசி காலத்திலுள்ள நமக்கு மிகவும் அவசியமென நினைக்கிறேன்.

ஆவியானவர் பவுலின் மூலம், **“..உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்”** (ரோம.12:2) என திருவுளம்பற்றுகிறார். ஆம், நம் மனம் மறுரூபமாக வேண்டும். மறுரூபம் என்றால் என்ன? ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடைவது. அதாவது பழைய நிலையிலிருந்து புதியநிலைக்கு மாற்றமடைவது. அப்படியானால் மனதளவில் நம்முடைய நிலை என்ன என்பதை தேவனுடைய வார்த்தையின் துணை கொண்டு அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நம்முடைய உள்ளிந்திரியங்களை தேவன் ஒருவரே அறிவார். நம்முடைய இருதயம் செம்மையாக இருக்கிறதா? அல்லது திருக்குள்ளதாயிருக்கிறதா? என்பதையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்குமுன் ஒன்றும் மறைவானதில்லை என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரியே, இன்றைய நாட்களில் எங்கும் மாய்மாலம் பெருகியுள்ளது. அநேகர் தங்கள் உதடுகளினால் இனிமையாகப் பேசுவர், ஆனால் தங்கள் உள்ளத்திலோ வஞ்சகம் அல்லது கபடு நிறைந்து காணப்படும். ஆனால் நாமோ மிகவும் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக மிக ஞானமுள்ளவர்களாக நடக்கவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது “புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்” என (கொலோ.4:5) போதிக்கிறது. ஒருவேளை நாமே, கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பேயிருக்கிறவர்களைப் போல் மாய்மாலம் பண்ணிக்கொண்டு வாழ்வோமென்றால் முதலாவது நாம் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். நம்முடைய மனம் பலவிதமான பாவங்கள் நிறைந்து பழைய ஆதாமின் நிலையிலிருக்குமானால் நம் மனம் புதிதாக வேண்டியது அவசியம் “உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,”

(எபேசி.4:23) என வேதம் கூறுகிறது. பழைய ஜென்ம சுபாவங்களாகிய கோபம், மேட்டிமை, பொய், அசுத்தம், புறங்கூறுதல், கோள்ச்சொல்லுதல், சுயநலம், இன்னும் இது போன்ற அநேக காரியங்களை நம்மிலிருந்து அப்புறப்படுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, இப்பேர்பட்ட நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு உள்ளத்தில் புதிதான ஆவியினை பெற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப் 2:38 “நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்கிறது. அப்படியானால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் உள்ளத்திலே பரிசுத்த ஆவியாகிய அந்த புதிதான ஆவியுள்ளவர்களாக மாறுவோம். அப்போது பழையவைகள் ஒழிந்துபோகும். இவ்வாறாக நம்முடைய மனம் புதிதாகி நாம் நம்முடைய பழைய பாவநிலையிலிருந்து மாறி மறுரூபமடைவோம்.

இதையே கொலோசெயர் 3:8-9ம் கூட “இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,”** என வலியுறுத்துகிறது. மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய செய்கைகள் நம்மிடம் இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அவைகளை களைந்து போட இப்போதே முயற்சிப்போம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற அநேகர் அடித்துக்கொள்ளுகின்றனர். ஓயாது தங்களுடைய மேன்மையையே நாடி மற்றவர்களையும் காயப்படுத்தவோ அல்லது பிறருக்குத் தீமைசெய்யவோ துணிகின்றனர். அன்பு சகோதரியே, இழிவான ஆதாயத்தை நாடிப் போவாயானால், தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளை எப்படி பெற்றுக்கொள்ளுவாய்? கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத உங்களுடைய செய்கைகளினால் மேலான ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர். லோத்தின் மனைவி அன்று பூமிக்குரியவைகளைத் திரும்பிப்பார்த்து உப்புத்தூணாகி மேலான காரியத்தை இழந்தாள். ஒருவேளை வரக்கூடிய பிரச்சனைகளின் அழுத்தத்தினாலும், பாரத்தினாலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான செய்கைகளை என்னால் செய்யமுடிகிறதில்லை. கர்த்தரை நம்பி இத்தனை நாட்களாக என் துன்பமும் துயரமும் எங்கே ஒழிந்தன, விரும்பாத காரியங்களே என் வாழ்வில் நடக்கிறது, அநேக இழப்புகளையும், வியாதிகளையுமே அனுபவிக்கிறேன் என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்று நகோமி தன்னுடைய புருஷனையும், தன்னுடைய குமாரர்களையும் இழந்தாள். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர்

என்னை கிலேசப்படுத்தியிருக்கையில்.''(ரூத்.1:21) என்று அங்கலாய்த்துக் கொண்டாள். அன்புசகோதரியே, நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடனே, கர்த்தர் எல்லாவித உலக ஆசீர்வாதங்களையும் குறைவில்லாமல் தருவேன் என நமக்கு வாக்குப்பண்ணவில்லை. ஆனால் 'தேவன் நம்மோடிருப்பதாக' (மத். 1:23) வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதம் பெரிதல்லவா? அவர் இந்த பூமியிலே நம்மோடிருப்பாரானால், மறுமையில் மேலான இடத்தில் அவரோடுகூட நாம் இருக்கப்போவது அதிக நிச்சயமல்லவா? அன்பு சகோதரியே வரப்போகிற மேலான ஆசீர்வாதத்தை நினைத்து நம்முடைய பழைய செய்கைகளைக் களைந்து போடுவோமாக!

மேலும் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட **புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்**'' (எபே.4:24) ஆம். எவ்வாறு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுவது? மெய்யான அதாவது உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் மாறும்போது புதிய மனுஷனைத் தரித்துகொள்கிறோம். அதாவது ஆதாமின் கீழ் பாவத்திற்குட்பட்ட நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூடச் (இயேசுவோடுகூட) சிலுவையில் அறையப்படும் போது புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். பவுல் இதனையே ''கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனிநான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்...'' (கலா. 2:20) என்கிறார். ஏனெனில் ''அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.''(1கொரி.1:31) இப்படியாக நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிற இயேசுவைத் தரித்துக்கொள்ளும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. இப்படியாக நாம் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம்.

அன்பான சகோதரியே, இதுவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்றாகும். வீழ்ந்துபோன ஆதாமின் பாவசுபாவத்திலிருந்து நம்முடைய மனதையும், நம்முடைய செய்கைகளையும் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். மீண்டும் ஏதேனின் (The Happy Place) பரலோக வாழ்விற்கு திரும்ப, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிகாரமாயிருப்பதினால் அவரை விசுவாசித்து, அவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெற்று புதிய மனுஷியாக மாறுவீர்கள். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் புதிதாகும். அப்போது கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்து. போஷித்துக் காப்பாற்றுவார். அவருடைய மந்தையில் சேர்ந்து உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டு நித்திய ஆசீர்வாதம் பெற கர்த்தர் தாமே உதவிசெய்வாராக!

# நாம் ஏன் கிறிஸ்துவின் சபையார் எனப் பெயரிடப்பட்டோம்?

## Why we`re named "Church of Christ"?

1. கிறிஸ்து தம்முடைய சுய இரத்தத்தினால் சபை சம்பாதித்தார் - அப்.20:28

   Christ purchased the Church with His blood

2. கிறிஸ்து சபையைக் கட்டினார் - மத்.16:18

   Christ built the Church

3. கிறிஸ்து சபையை "தம்முடைய " சபை என அழைத்தார் - மத்.16:18

   Christ called the Church "His"

4. சபை கிறிஸ்துவின் சரீரம் என அழைக்கப்படுகிறது - எபே.1:22-23

   The Church is called  the body of Christ

5. சபை கிறிஸ்துவின் சொந்த வீடு எனக் குறிப்பிடப்படுகிறது - எபி.3:6

   The Church is referenced as Christ`s own House

6. கிறிஸ்து சபைக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் - எபே.5:25

   Christ gave Himself for the Church

7. சபையானது கிறிஸ்துவின் மணவாட்டி - 2கொரி.11:2

   The Church is the body of Christ

8. கிறிஸ்துவே சபையின் இரட்சகராயிருக்கிறார் - எபே.5:23

   Christ is the Savior of the Church

9. கிறிஸ்துவே சபைக்குத் தலையாக இருக்கிறார் - எபே.1:23

   Christ is the head of the Church

10. கிறிஸ்து இரட்சிக்கப்படுகிறவர்களை சபையில் சேர்க்கிறார் - அப்.2:47

    Christ adds the saved to the Church



*கிறிஸ்துவின் சபையார்*
*உங்களை*
*வாழ்த்துகிறார்கள்*
*ரோமர் 16:16*

**The Church of Christ greet you**



# மழை நீரை சேமித்து!
# மகத்தான வளம்பெறுவோம்!




உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள்.

இக்கடிதத்தின் மூலம் வாசகர்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகவும் சந்தோஷப்படுகிறோம். நீங்கள் தொடர்ந்து மாத சந்தா தொகையை செலுத்தி வருகிறதற்காக ஸ்தோத்திரம். நமது மாத இதழை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். அவர்களும் சத்தியத்தை அறிந்துகொள்ள அது உதவியாக இருக்கும். உங்களுடைய நண்பர்கள் உறவினர்களுக்கும் இவ்விதழ் தேவைப்பட்டால் அவர்களுடைய முழுமுகவரியையும் எங்களுக்கு எழுதி தெரியப்படுத்துங்கள்.

உங்கள் பகுதியில் கிறிஸ்துவின் சபை இல்லையென்றால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் அங்கு கிறிஸ்துவின் சபையார் கூடுவதற்கு ஆலோசனைகளைக் கொடுப்போம். வேதபாட வகுப்புகள், சுவிசேஷகூட்டங்கள், சகோதரிகள் கூட்டங்கள், வாலிபர்களுக்கான ஆலோசனை முகாம் நடத்தவும் எங்களோடு தொடர்புகொள்ளுங்கள். ஆவிக்குரிய அநேக புத்தகங்கள் எங்களிடம் இருக்கிறது எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்.

எங்களோடு தங்கி ஆண்டவருக்காக ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் (9 4 4 3 5 5 8 0 4 1) என்ற மொபைல் எண்ணோடு தொடர்பு கொண்டு அனுமதி பெற்று வாருங்கள்.

நீங்கள் இவ்விதழ் மூலமாக பெற்றுக்கொண்ட சத்தியத்தை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## ஆசிரியர் கடிதம்...

அன்புடன்,
ஆசிரியர்



## நடப்புச்செய்திகள்

- சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா 5 ஆண்டுகளுக்கு சூரியனில் நடக்கும் நிகழ்வுகளை ஆய்வு செய்யும் என சோம்நாத் கூறியுள்ளார்.
- உழவர்களுக்கு உறுதுணையாக தமிழ்நாடு அரசு நிற்கும் என முதல்வர் கூறியுள்ளார்.
- இந்தியாவின் முன்னணி வீராங்கனையான பிவி சிந்து ஃபோர்பஸ் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

நன்றி - Way2News

சிறுவர் பகுதி

# பேலியாளின் மக்கள்

## Sons of Belial வேத பகுதி: 1சாமுவேல் 2:12–17



ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலீஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர். அதைப்போல ஏலி ஆசாரியன் பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக் கூடியவர்கள்கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. நீங்கள் இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்தால், ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:**

**“மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்” (நீதி.11:20).**

## வேத அறிவுப் போட்டி எண்: 282


போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. கர்த்தர் மோசேயை எந்த மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார் என்றார்?
2. எந்த சபையார் சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பித்தார்கள்?
3. எந்த ராஜா இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரையும் அடிமைப்படுத்தவில்லை?
4. நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு நாம் என்ன செய்யவேண்டும்?
5. ஆகாபுக்கு சமாரியாவிலே எத்தனை குமாரர் இருந்தார்கள்?
6. இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு துன்பத்தை அநுபவிக்கிறேன் ஆனால் எது கட்டப்பட்டிருக்கவில்லை என்றான் பவுல்?
7. கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்ட அறுநூறுசேக்கல் நிறைபொன்னை கொடுத்து வாங்கிய ராஜா யார்?
8. ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் வேண்டுமா?
9. எவன் எவனை நோக்கி: நான் தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள் என்றவன் யார்?
10. போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், எதற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல?

## வேதாகம ஆய்வு... 66

# ஸ்தேவான்
## Stephen

1. இவன் கிரேக்க பாஷை பேசின ஒரு யூதன்
2. முதல் நூற்றாண்டு சபையில் நற்சாட்சி பெற்ற ஏழுபேரில் ஒருவன் – அப்.6:5
3. பெரிய அற்புதங்களைச் செய்தான் – அப்.6:8
4. ஸ்தேவான் தொழுது கொள்ளுகையில் அவனைக் கல்லெறிந்தார்கள் – அப்.7:59
5. இவன் இரத்தசாட்சியாக மரிக்கும்போது சவுல் அங்கே இருந்தான் – அப்.22:20



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

February 2024

காஞ்சிபுர மாவட்டத்தில்
கர்த்தருடைய பணியைச் செய்யும்
சகோதரன் மெல்கி








செங்கல்பட்டு மாவட்டத்தில்
கர்த்தருடைய பணியைச் செய்யும்
சகோதரன் இம்மானுவேல் ராஜ்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



லூக்கா
2:13–15

இயேசுகிறிஸ்து ஏரோதின் மரணபரியந்தம்
எகிப்திலே வளர்க்கப்பட்ட இடம்

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

love God
love people
be a servant

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan